| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 17.03.2026 | |
| STC No. 1069/2023 | |
| சாட்சி : PW1(Recall) | |
| பெயர் : திரு. ராஜரத்தினம் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. பரசுராமன் | தொழில் : |
| கிராமம் : வையம்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது :63 /2026 |
| ( எதிரி ஆஜர், வழக்கறிஞர் ஆஜர்) | |

---

**சாட்சி மனுவில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. 29.08.2023 அன்று ம.சா.3 ஆவணமானது எதிரிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் உள்ள சங்கதிகளுக்கு எதிரி பதில் அறிவிப்பு கொடுத்த விபரத்தை என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். அந்த அறிவிப்பை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். சேமிப்பு கணக்குள்ள எனக்கும், எனது மனைவிக்கும் கனராவங்கி வங்கி கணக்கு எண்.479410101199 க்கு எதிரி 01.01.2022 முதல் 31.12.2022 வரையில் பணம் அனுப்பியுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும்.

2. எதிரி எனக்கு பணம் அனுப்பிய விபரத்தை இந்த வழக்கின் தாக்கலின் போது எனது வழக்கறிஞர் அறிவிப்பிலோ, பதில் அறிவிப்பு கிடைத்த பின்பு நான் தாக்கல் செய்த பிராதிலோ, எனது நிருபண வாக்குமூலத்திலோ என்ன காரணத்தினால் நான் மறைத்தேன் என்றால் எதிரி என்னிடம் அவ்வப்போது கடன் வாங்குவார், அதை எனது கணக்கில் வரவு வைப்பார். அந்த நம்பிக்கையின் அடிப்படையில் நான் எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பில் இந்த வழக்கிற்கு முன்பு நான் எதிரிக்கு கடன் கொடுப்பேன், வாங்குவேன் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

3. எனக்கு கொடுக்க வேண்டிய பணத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் கொடுத்துவிட்டு எனது மனைவியிடம் இருக்கிற இந்த வழக்கு காசோலையை

கேட்டதற்கு நான் கூடுதல் தொகை கேட்டு எனக்கு பணம் வந்த விபரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் உண்மையிலியே நான் சொன்ன மாதிரி கொடுக்கல் , வாங்கல் இருந்திருந்தால் அந்த ஒரு வரியை எனது சட்ட அறிவிப்பிலும், எனது பிராதிலும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/–R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.